13.12.2017

தினமலர்

## மூலிகை பயிர் சாகுபடிலாபம் தரும் விவசாயம் :



வீட்டு தோட்டத்தில் வளரும் பலவித தாவரங்களுள் மூலிகை பயிர்களும் ஒன்று நமது . பாரம்பரிய மருத்துவத்தில் உதவிகரமாக விளங்கிய மூலிகை பயிர்கள் ஆங்கில உலகளவில் .மருத்துவ முறையிலும் பயன்பாட்டுக்கு உறுதுணையாக உள்ளன இந்தியாவில் மட்டுமே12 மெகா பயோடைவர்சிட்டி வகைகள் 2.4 சதவிகித பரப்பில் உள்ளது கிட்டத்தட்ட .15,000 வகைகள் அபூர்வ மூலிகை பயிர்கள் நம் நாட்டில் மட்டும் உள்ளன இந்தியாவில் .20 வகை அக்ரோ ஈக்காலஜிகல் மண்டலங்கள், 15 அக்ரோ கிளைமேட் மண்டலங்கள், 10 வெஜிடேட்டிவ் மண்டலங்கள் உள்ளன ஏரக்குறைய . 45,000 வகையான தாவர இனங்கள் 15 பயாட்டிக் மண்டலங்களில் வளர்க்கப்படுகின்றன.

தற்கால மதிப்பீட்டின் 6,198 வகை மூலிகை பயிர்கள் இமாலயம், கடற்கரை, பாலைவனம், மழை பொழியும் வனங்களிலும் வளர்கின்றன நவீன மருத்துவத்தில் .25 சதவிகிதம் மூலிகை பயிர்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மருந்துகள் தான் ஆங்கில மருந்து தயாரிப்புக்கு உதவுகின்றன இந்திய மருத்துவத்தில் .2,400 தாவர வகைகள் பயன்படுகின்றன குறிப்பாக ஆயுர் வேதத்தில் .1,587 மூலிகை பயிர்கள், சித்த மருத்துவத்தில் 1,128 வகைகளும், யுனானி பிரிவில் 503 தாவரங்களும், சோவாரிக்பா எனும் மருத்துவத்தில் 253 மூலிகை பயிர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நவீன ஆராய்ச்சிகளின்படி உள்நாடு, வெளிநாடு என யார் வேண்டுமானாலும் தேவையின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களை நேரடியாக தொடர்பு கொண்டு நமது மருந்துக்கு உதவும் தாவரம் மற்றும் தாவரப் பொருட்களை விற்பனை செய்யலாம் இதற்கு இலவச செயலி .'E - CHARAK' என்ற பெயரில் இந்திய அரசால் வெளியிடப்பட்டதுஉங்கள் பகுதியில் மூலிகை வளர்க்க விரும்புவோர் . 98420 07125 என்ற அலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

- டாக்டர் **பாஇளங்கோவன்.**
உதவி இயக்குனர்
தோட்டக்கலை, உடுமலை.

## ரூ.500 செலவு; ரூ.1000 வரவு, மாடித்தோட்டத்தின் மாண்பு

விளை நிலங்கள் வீட்டு மனைகளாக மாறியதால், அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு பொருளை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் .100 ரூபாய்க்கு காய்கறி வாங்கி வந்த நிலை மாறி வாரத்துக்கு காய்கறிக்கு மட்டும் 500 ரூபாய் செலவழிக்க வேண்டியுள்ளது. தேவையை அறிந்து ரசாயன உரம் கலந்த காய்கறிகள் அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது அரிசியை தரம் பார்க்கும் . நமக்கு, காய்கறிகளை தரம்பார்க்க தெரிவதில்லைஆனால் ., வீட்டின் மாடியில் இந்த காய்கறிகளை விளைவித்து, அதன் தரத்தை அறிவதுடன் அன்றாட தேவையையும் பூர்த்தி செய்யலாம், என்கிறார் காரைக்குடி பர்மா காலனியை சேர்ந்த மாடித்தோட்ட விவசாயி ஜி.மணிமாறன்.

**கொசுவை ஒழிக்க தவளை**

அவர் கூறியதாவது வீட்டின் மாடியில் :20 அடிக்கு 20 அடி உள்ள இடத்தில் பசுமை குடில் அமைத்து, உயர் தர பாலி எத்திலீன் குரோ பேக்கில் செடிகளை வளர்த்து

வருகிறேன் இதன் .மூலம் சுழற்சி முறையில் தினசரிக்கு தேவையான காய்கறி மற்றும் கீரை வகைகள் கிடைக்கிறதுவீட்டின் முன்புறம் ஐந்தடி ஆழம் ., மூன்று அடி அகலம் கொண்ட சிறிய நீரூற்று தொட்டி அமைத்துள்ளேன் இதன் கீழ் பகுதி ஆற்று மணலால் . இதில் மீன் .ஆனது, தவளை இருக்கின்றனதண்ணீரின் மேல் ப .குதியில் நீரில் வளரும் அல்லி செடிகள் உள்ளது கொசுக்கள் வந்து முட்டையிடும்போது அவற்றை தவளை . இதனால் .மற்றும் மீன் சாப்பிட்டு விடுகிறது, கொசுவிலிருந்து நம்மை பாதுகாத்து கொள்ளலாம்.



**50 லிட்டர் நீர் போதுமே**

மாடியில் உள்ள ஒரு பகுதியை மட்டும் மாடி தோட்டத்துக்காக ஒதுக்கியுள்ளேன் . கத்தரி, வெண்டை, தக்காளி, முள்ளங்கி, புதினா, கொத்தமல்லி, மிளகாய், பருப்பு கீரை, முட்டைகோஸ், காலி பிளவர், மணத்தக்காளி கீரை, பருப்பு கீரை என பல வகை பயிர்களை நட்டு பராமரித்து வருகிறேன்சொட்டு நீர் பாசனம் ., நிழல் வலை அமைக்க 50 ஆயிரம் ரூபாய் செலவானது நாள் ஒன்றுக்கு .50 லிட்டர் தண்ணீர் போதுமானது . கத்தரியை பொறுத்தவரை30 நாளில் காய்க்க ஆரம்பித்து விடும்புதினா ., மல்லியை தேவைக்கு அன்றன்று பறித்து விட்டு, அதன்பிறகு விதைகளை துாவிக் கொண்டே வரலாம்.

**ரூ.500 செலவு ரூ.1,000 வரவு**

ஒவ்வொரு பேக்கிலும் ஆற்று மண், செம்மண், மண்புழு உரம், தென்னை நார் ஆகியவற்றை சமமாக கலந்து வேர்விடும் அளவு நிரப்ப வேண்டும் இடைப்பட்ட . மாதம் .நேரங்களில் வேப்பம் புண்ணாக்கு போடலாம்500 ரூபாய் வரை செலவாகும் .

1,000 ரூபாய்க்கு காய்கறிகள் கிடைக்கும்இயற்கை முறையில் விளைவிப்பத .ால்

இதன் சுவையே தனிவரும் காலங்களில் அனைவரும் .

அவரவருக்கு தேவையான உணவை அவரவரே தயார் செய்து சாப்பிடும் நிலை வந்தாலும் வரலாம்அதற்கான முன்னோட்டம் தான் இந்த மாடித்தோட்டம் ., என்றார்.

மாடித்தோட்ட ஆலோசனைக்கு 94431 30916.

**-தசெந்தில்குமார்.,** காரைக்குடி.

### புஞ்சையை நஞ்சையாக்கி சாதித்த விஞ்ஞானி



மழை பொழிவு குறைவு, விளை பொருளுக்கு விலை கிடைக்காதது போன்ற காரணங்களால் சிவகங்கை போன்ற வறட்சி மாவட்டங்களில் பலர் விவசாயத்தை கைவிட்டு வருகின்றனர். ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் முட்புதர் காடாகவும், தரிசாகவும் இருந்த நிலத்தை பசுமையாக மாற்றியுள்ளார் சிவகங்கை மாவட்டம் நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த ஓய்வு விஞ்ஞானி கே.ரங்கராஜன், 78. இவர் மா, தென்னை, மக்காச்சோளம், நிலக்கடலை, கத்தரியை சாகுபடி செய்துள்ளார். மேலும் மாடு, கோழிகளையும் வளர்த்து வருகிறார்.

<u>**விவசாய விஞ்ஞானி**</u>

அவர் கூறியதாவது: கொச்சி வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் முதன்மை விஞ்ஞானியாக 37 ஆண்டு பணிபுரிந்தேன். ஓய்வு பெற்றதும், 15 லட்சம் ரூபாய்

கிடைத்தது. இதில் 2001ல் 12 லட்சம் ரூபாயில் 28 ஏக்கர் நிலத்தை வாங்கினேன். முட்புதர்களாகவும், மேடு, பள்ளமாகவும் இருந்த நிலத்தை பண்படுத்த மீதிப்பணத்தையும் செலவழித்தேன். ஒரு திறந்தவெளி கிணறு, இரண்டு 'போர்வெல்கள்' உள்ளன. 'போர்வெல்' தண்ணீரும் கிணற்றிற்கு கொண்டு சென்று, அங்கிருந்து சொட்டுநீர், தெளிப்பு நீர் பாசனம் மூலம் பயிர்களுக்கு பாய்ச்சுகிறோம்.

**15 டன் மாங்காய்**

மொத்தம் 12 ஏக்கரில் மா மரங்கள் உள்ளன. இதில் பங்கனப்பள்ளி, இமாபசந்த், கல்லாமை, பாலாமணி ரகங்கள் உள்ளன. சொட்டுநீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சுகிறோம். 4 ஆண்டுகளில் காய்க்க துவங்கின. ஆண்டுதோறும் ஒரு ஏக்கருக்கு உரம், பூச்சிக்கொல்லி மருந்து, ஊக்குவிப்பு மருந்துக்கு 25 ஆயிரம் ரூபாய்க்கும் மேல் செலவழிக்கிறோம். ஆண்டுக்கு 10 முதல் 15 டன் மாங்காய் கிடைக்கும். ஊடுபயிராக தட்டை, உளுந்து, துவரை பயிரிட்டுள்ளோம்.

**'சிம்ரன்' கத்தரி**

ஒரு ஏக்கரில் 'சிம்ரன்' ரக கத்தரியை சாகுபடி செய்துள்ளோம். வாரத்திற்கு 450 கிலோ கிடைக்கிறது. ஆறு மாதங்களுக்கு பலன் கிடைக்கும். அவற்றிற்கு 'ஸ்பிரிங்லர்' மூலம் நீர் பாய்ச்சி வருகிறோம். மொத்தம் விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துக்கு 15 ஆயிரம் ரூபாய் செலவு செய்துள்ளேன். நான்கு ஏக்கரில் மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ளோம். ஒரு ஏக்கரில் நிலக்
கடலையும் சாகுபடி செய்தோம்.

**பண்ணை குட்டை**

வரப்புகளில் வேலி போன்று தென்னை, தேக்கு மரங்களை வைத்துள்ளோம். தென்னை மூலம் இளநீர், தேங்காய் கிடைக்கிறது. பத்து பசுக்கள் வளர்க்கிறோம். அவற்றில் இருந்து கிடைக்கும் சாணம், சிறுநீரை பயிர்களுக்கு உரமாக பயன்படுத்துகிறோம். தவிர நாட்டுக்கோழிகள், வான்கோழிகள், கின்னி கோழிகளும் உள்ளன. நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்க 5 பண்ணை
குட்டைகள் உள்ளன. மீன் வளர்த்தோம். நல்ல லாபம் கிடைத்தது. ஒவ்வொன்றும் வெவ்வேறு காலக்கட்டங்களில் பலன் தருவதால் பணக் கஷ்டம் ஏற்படாது, என்றார். தொடர்புக்கு 94427 22928.

**- இ.ஜெகநாதன்,** சிவகங்கை.